குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்,
முன்னிலை: – திருமதி. S.சர்மிளா., B.A.B.L.(HONS) L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12–ஆம் நாள் வியாழக்கிழமை
<u>CMP No: 102/2026,</u>
in
<u>Cr.No. 77/2026</u>
in
(தீவட்டிப்பட்டி காவல்நிலையம்)

திரு.வெங்கடேசன் த/பெ.துரைசாமி,

.....மனுதாரர்/எதிரி

//எதிர்//

காவல் உதவி ஆய்வாளர்,
தீவட்டிப்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.77/2026,
சட்டபிரிவுகள்.U/s.296(b),118(1),351(3) BNS.

.... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 10.03.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராமசாமி அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனுவானது பிரிவு 480 BNSS ன் கீழ் மனுதாரரை பிணையில் விட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**வழக்கின் வரலாறு சுருக்கம்:**</u>

இவ்வழக்கின் வாதியின் பெயர் காளியப்பன் என்பவர் சுண்டாக்காப்பட்டி, குழந்தை நகரில் தன் பெற்றோர் உடன் இருந்து செங்கல் சூளையில் வேலை செய்து வருவதாகவும், தனக்கு திருமணம் ஆகி தன் மனைவி மேகலா என் குழந்தையுடன் 15 வருடத்திற்கு முன்பு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றும், தான் ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவன் என்றும், தான் 02.03.2026 ம் தேதி காலை தொப்பூர் முனியப்பன் கோவிலுக்கு சென்றுவிட்டு பகல் 12.30 மணிக்கு தீவட்டிப்பட்டி வந்து விட்டதாகவும், பின்னர் காடையாம்பட்டி GH பின்புறம் உள்ள தன் தங்கை செல்வியின் வீட்டிற்கு போவதற்காக பொம்பிடி பஸ்ஸில் ஏறி சென்றபோது காடையாம்பட்டி யூனியன் ஆபீஸ் அருகில் சென்றபோது

S
SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.12 18:13:10 +0530

கண்டக்டர் அதாவது அரசு பேருந்தின் கண்டக்டர் தன் அருகில் நின்று கொண்டிருந்த நபர்களிடம் டிக்கெட் வாங்கியாச்சா என்று கேட்க அந்த நபர் குடிபோதையில் தான் வாங்கவில்லை உன்னால் என்ன பண்ண முடியும் என்று சொல்ல தான் ஏம்பா டிக்கட் வாங்க வேண்டியது தானே என்று கேட்க அந்த நபர் நீ என்னடா கண்டார ஓழி தேவடியா பையா கேட்கிற என்று திட்டியதாகவும், தான் தன்னை திட்டுற என்று கேட்டபோது அந்த நபர் டேய் உன் வேலையை பாருடா என்று கையால் முன் கழுத்தில் நசுக்கி தள்ளியதாகவும், தான் சுதாரித்து அவனை தள்ளியபோது டேய் நான் யாருன்னு பாக்குரியா உன்னை என்ன பன்றென் பாருடா தேவடியா பையா என்று அவன் வேஸ்டிக்குள் அன்றாயர் பாக்கெட்டிலிருந்து பேனா கத்தியை எடுத்து என் இடது காது அருகிலும், இடது கண் அருகிலும் கத்தியால் கீறி இரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும் தான் அவன் கையில் இருந்த கத்தியை பிடுங்க முயற்சித்த போது அந்த நபர் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கத்தியை இடது பக்க அல்லையில் குத்தி காயத்தை ஏற்படுத்தியதாகவும், தான் வலி தாங்க முடியாமல் சத்தம் போட அதை அந்த நபர் தான் வெங்கடேசன்டா என்னை பத்தி காடையாம்பட்டியில் கேட்டுபாருடா என்று அவனை பிடிக்க வந்தவர்களையும் கத்தியை காட்டி மிரட்டி சென்றதாகவும், பிறகு ஓமலூர் அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், பிறகு தீவட்டிப்பட்டி காவல்நிலைய குற்றவழக்கு எண்.77/2026, சட்டபிரிவு.296(b),118(1),351(3) BNS. நாள் 04.03.2026 ன் படி பதிவு செயய்யப்பட்டது.

<u>**மனுவின் சுருக்கம்:**</u>

மனுதாரர் பிரிவு.U/s.296(b),118(1),351(3) BNS. குற்றத்திற்காக 04.03.2026 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ளார் என்றும், மனுதாரர் மேற்படி குற்றத்தை செய்யவில்லை என்றும், மேற்படி குற்றம் ஆனது மரண தண்டனையோ அல்லது ஆயுள் கால தண்டனையோ விதிக்க கூடிய குற்றம் இல்லை என்றும், மேலும் மனுதாரர் மதிக்கத்தக்க குடிமகன் என்றும், அவர் மறைந்து கொள்ள மாட்டார் என்றும், நீதிமன்றம் எதிர்பார்க்கும் போதுமான பிணைகளையும், பிணை பத்திரத்தையும், எழுதி தருவதற்கு தயாராக உள்ளார் என்றும், மேலும் எதிரி 9 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார் என்றும், எதிரியை பிணையில் விடுவித்தால் நீதிமன்றம் விதிக்கும் எந்தவித நிபந்தனைக்கும் கட்டுப்பட தயாராக உள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

<u>**அரசு தரப்பின் பதில்**</u>

எதிர்மனுதாரர் காவல் துறை இவ்வழக்கு புலன் விசாரணை ஆரம்ப நிலையில் இருப்பதால் எதிரியை பிணையில் விட்டால் அவர் மீண்டும் இது போன்ற குற்றச்செயலில்

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.12 18:13:15 +0530

ஈடுபடுவார் என்றும், எதிரியை பிணையில் விட்டால் சாட்சிகளை கலைக்க நேரிடும் என்றும், எதிரி தலைமறைவு ஆகிவிடுவார் என்றும், மேற்கண்ட காரணங்களுக்காக மிகவும் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர்.

**<u>தீர்வு:</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இவ்வழக்கின் கோப்புகளை பார்க்கும் போது எதிரியானவர் 04.03.2026 அன்று பிரிவு. 296(b),118(1),351(3) BNS, குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் இந்த குற்றத்தை செய்யவில்லை என்றும், இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 9 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளார் என்று வாதிட்டார். மேற்படி இவ்வழக்கின் வாதி மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வீடு திரும்பி விட்டார் என்றும், எதிரி தற்போது பிணையதாரர்கள் கொடுக்க தயாராக உள்ளார் என்றும், மேலும் மனுதாரர்/எதிரியை நீதிமன்ற காவலில் வைப்பது அவசியம் இல்லாதது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

அரசு தரப்பானது மனுதாரர்ரை பிணையில் விடும் பட்சத்தில் அவர் சாட்சிகளை கலைக்கக் கூடும் என்பதற்கும், தலைமறைவாகிவிடுவார் என்பதற்கும் தகுந்த திருப்திக்காரமான காரணங்களை எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும் உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையான **'bail is the rule and Jail is an exception'** என்பதையும் இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருந்த போதிலும் மனுதாரரின் பங்களிப்பை விசாரணையிலும் இந்த நீதிமன்றத்திலும் உறுதி செய்வதற்காக தகுந்த நிபந்தனைகளுடன் மனுதாரர்ரை பிணையில் விடுவது தகுந்ததாக மற்றும் சரியானதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக இம்மனுவானது கீழ் கண்ட நிபந்தணைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது:

1.மனுதாரர் சொந்தமாக **ரூ.10,000/—த்திற்கு** பிணைப்பத்திரமும், அதே தொகைக்கு **இரண்டு நபர்கள் பிணை பத்திரமும்** எழுதி தரவேண்டும்.

2. மனுதாரர் ஜாமீன் மனு மற்றும் பிணைபத்திரம் **குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 14—ன்** படி இருக்க வேண்டும். மேலும் பிணையதாரர்களின் புகைப்படமானது ஜாமீன் கொடுப்பதற்கு 6 மாதத்திற்குள்ளாக எடுக்கப்பட்ட புகைப்படமாக இருக்க வேண்டும்.

3. எதிரி பிணையில் இருந்து வெளியே வந்த நாள் முதல் தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல்நியைலம் முன் ஆஜராகி 15 நாட்கள் கையொப்பம் இடவேண்டும்.

4. மனுதாரர் அரசு தரப்பு சாட்சியங்களை கலைக்க கூடாது என்றும்,

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2026.03.12 18:13:20 +0530

5. மனுதாரர் இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட கூடாது என்றும்,

6.மனுதாரர் தலைமறைவு ஆகாமல் விசாரணைக்கு அழைக்கும் போது நீதிமன்றத்திலும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்திலும் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

மேற்படி நிபந்தணைகளுக்கு உட்பட்டு இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் 12–ம் வியாழக்கிழமை நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2026.03.12 18:13:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.